**கமு/கமு/அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை - சாய்ந்தமருது**

# இரண்டாந் தவணைக் கணிப்பீடு - 2023

| தரம் 4 | தமிழ்மொழி | புள்ளிகள் |
|---|---|---|
| | வகுப்பு | நேரம்: 1 மணி 30 நிமிடம் |

சுட்டெண்/பெயர்:

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. உண்மை என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது?
   1. பொய் 2. வாய்மை 3. ஞானம்

2. 'மறதி' என்பதன் எதிர்க்கருத்துச் சொல் எது?
   1. ஞாபகம் 2. அறிவு 3. புத்தி

3. 'சீமான்' என்பதன் எதிர்பாற் சொல் எது?
   1. அரசன் 2. பண்டிதன் 3. சீமாட்டி

4. உயர்திணை, ஆண்பால், ஒருமை, பெயர்ச்சொல் எது?
   1. சிறுவர்கள் 2. விவசாயி 3. மரம்

5. பொன் + குடம் என்பதைச் சேர்த்து எழுதினால் வருவது,
   1. பொட்குடம் 2. பொன்குடம் 3. பொற்குடம்

6. இருளை ஒளியால் நிரப்பியவர் யார்?
   1. தோமஸ் அல்வா எடிசன் 2. அலெக்சாண்டர் கிரகம்பெல் 3. மார்க்கோணி

7. பின்வருவனவற்றுள் தொழிற்பெயர்ச் சொல் எது?
   1. வட்டம் 2. பாடினான் 3. மீனவன்

8. 'அமுதன் வேகமாக ஓடினான்" இதில் வந்துள்ள வினை அடைமொழி எது?
   1. அமுதன் 2. ஓடினான் 3. வேகமாக

9. மூதுரைப் பாடல்களைப் பாடியவர் யார்,
   1. திருவள்ளுவர் 2. ஔவையார் 3. பாரதியார்

10. வியப்பு, மகிழ்ச்சி, அச்சம், வெறுப்பு, இரக்கம் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படும் நிறுத்தற்குறி எது?
    1. முற்றுப்புள்ளி 2. காற்புள்ளி 3. வியப்புக்குறி

(10 X 1 = 10 புள்ளிகள்)

02. பின்வரும் சொற்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

1. கூரினார் - ...................................................
2. விஞ்சானி - ...................................................
3. பன்டிகை - ...................................................
4. அரிவியல் - ....................................................
5. நன்பன் - ........................................................

(5X 1 = 5)

03. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.

1. ஒளியைப் பரப்புவது ........................ (விளக்கு, விலக்கு)
2. நீ நீடுழி காலம் .............................. (வாள்க, வாழ்க)
3. ஆழம் ...................... காலை விடாதே (அறியாமல், அரியாமல்)
4. மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த ......... ஆகும். (பணி, பனி)
5. .................. செய விரும்பு. ( அரம், அறம்)

(5X 1 = 5)

04. பின்வரும் பாடலைப் பூர்த்தி செய்க.

மன்னனும் மாசறக் கற்றோனும் ................................................
மன்னனிற் .................................... சிறப்புடையன், மன்னற்குத்
தன் ...................................... சிறப்பில்லை, கற்றோனுக்கு
சென்ற ..................................... சிறப்புண்டு.

(4X 1 = 4)

05. பின்வரும் வாக்கியங்களை வாசித்து அறிவித்தல், அறிவுறுத்தல், கட்டளை என எழுதுக.

1. கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை இடுவதைத் தவிர்க்கவும் .................................................................
2. உணவு உண்ட பின்னர் பீங்கான் கோப்பை போன்றவற்றை இடது புறத்திலுள்ள தட்டில் வையுங்கள். ..............................................
3. நித்திரை கொள்ளும் போது கைபேசியை தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம் ........................

(3X 1 = 3)

06. பொருத்தமானவற்றுடன் இணைக்குக.

| | |
|---|---|
| 1. பயிர் | வடலி |
| 2. தவளை | தாள் |
| 3. தென்னை | நாற்று |
| 4. பனை | பிள்ளை |
| 5. புல் | பேத்தை |

(5X 1 = 5)

07. விடுகதைக்கான விடையை எழுதுக.

1. காற்று நுழைந்ததும் கானம் பாடுவான்'' அவன் யார்? ...............................................
2. அடிக்க மாட்டான். திட்டமாட்டான் ஆனால், கண்ணீரை வரவழைப்பான் அவன் யார்? ........................................................

(2X 2 = 4)

08. பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

1. அடம்பன் கொடியும் ........................................... மிடுக்கு
2. உப்பிட்டவரை ...............................................நினை.

(2X 2 = 4)

09. தொடர் மொழிக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.

1. மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன் ........................................
2. வீண் செலவு செய்பவன் .......................................

(2X 2 = 4)

10. சுருக்கக் குறிபீட்டினை விரித்து எழுதுக.

1. பி.ப. - ......................................................................
2. இ.போ.ச - ......................................................................
3. கி.மு - ......................................................................

(3X 2 = 6)

11. பின்வரும் குறியீடுகளின் கருத்தினை எழுதுக.





.......................................................................... ..............................................................................

(4X 2 = 4)

12. சேர்த்து எழுதுக.

1. மரம் + வேர் = ..................................................
2. பால் + குடம் = ..................................................
3. பூ + சோலை = ..................................................

(3X 2 = 6)

13. விளம்பரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தூய வெண்மைக்கு

முகில் சவர்க்காரம்
உங்கள் ஆடைகள் பளிச்சென்று
வெண்மையாக இருக்க வேண்டுமா?
முகில் சவர்க்காரம் வாங்குங்கள்,
பாடசாலைச் சீருடைகள் பால் போன்று
வெண்மையாக இருக்க முகில் சவர்க்காரம்
வாங்கிடுவீர்.

முகில் சவர்க்காரம்
வாங்குவோருக்கு

ஒரு கைக்குட்டை இலவசம்.
இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்
இன்றே வாங்குங்கள்.
முகில் சவர்க்காரம்.

1. இவ்விளம்பரம் எதனைப் பற்றியது? ..........................................................................................................
2. முகில் சவர்க்காரம் வாங்குவோருக்கு இலவசமாகக் கிடைப்பது எது? ................................................................
3. முகில் சவர்க்காரம் பாவிப்பதனால் பால் போன்று வெண்மையாக இருப்பது எது? ..........................................

(3X 2 = 6)

14. இடைவெளி நிரப்புக.

**(வாடிவதங்கி, கணீர் கணீர், கலகல, அங்கும் இங்கும், வண்ண வண்ண)**

1. கண்ணன் தொலைந்த பணப் பையைத் தேடி ............................................ அலைந்தான்.
2. எனது தங்கை .................................எனச் சிரித்தாள்.
3. சந்தையில் காய்கறிகள் ...................................... காணப்பட்டன.
4. தோட்டத்தில் பூக்கள் .............................. நிறங்களில் பூத்திருந்தன.
5. ஆலய மணி ................................... என்று ஒலித்தது. (5X 2 = 10)

15. விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க.

நூலக விண்ணப்பப்படிவம்

1. முழுப் பெயர் :.........................................................................................................................
2. பிறந்த திகதி :.........................................................................................................................
3. கற்கும் பாடசாலை :.........................................................................................................................
4. கற்கும் தரம் :.........................................................................................................................
5. வகுப்பாசிரியர் பெயர் : ......................................................................................................................

(5X 2 = 10)

16. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை எழுதுக.

   ............................................ ........................................................................................................................

   (1X 1 = 1)

2. "காய்கள் கட்டிய வெருளி" என்ற பாடத்தில் இருந்து பின்வரும் உறுப்புக்களுக்கு வந்து நின்ற காய்கறிகள் எவை?
   1. கன்னம் - : ..................................................................
   2. முறுக்கு மீசை : ..................................................................
   3. விரல்கள் : ..................................................................

(3X 1 = 3)

17. வாக்கியம் அமைக்குக.

மனம் : ..................................................................................................................................

மணம் : ..................................................................................................................................

கரி : ..................................................................................................................................

கறி : ..................................................................................................................................

(4X 2 = 8)

18. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.

நல்ல / நித்திரை / பழக்கம் / ஆகும் / விட்டெழுவது / அதிகாலையில்.

......................................................................................................................................................................

(1X 2 = 2)